**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~
Under Section 173 BNSS

DSP C 8102136

1. District : திண்டுக்கல் | PS: ஊ.த.க.பிரிவு, திண்டுக்கல் | Year: 2024 | FIR No.: 03/2024 | Date: 02-07-2024
மாவட்டம் | காவல்நிலையம் | ஆண்டு | மு.த.அ. எண் | நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 Sections பிரிவுகள்: 7 (a)
(ii) Act சட்டம்: as amended in 2018. Sections பிரிவுகள்: —
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: —
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 25-06-2024 - 10-45 மணிக்கு
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 01-07-2024 - 11-30 மணிக்கு
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 02-07-2024 Time : 07-00 மணிக்கு
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 02-07-2024 Time : 08-30 மணிக்கு
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Computer typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகம். சுமார் 04 கி.மீ தென்மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : — (b) Address : —
முறைக் காவல் எண் முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. S. கணேஷ்குமார் (b) Father's/ Husband's Name : திரு. சுப்பிரமணியன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 14.05.1989 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தகவல் தொழில் நுட்ப பணியாளர் (g) Address : 330, R.M. காலனி, பிள்ளையார் பாளையம், திண்டுக்கல்.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

திரு. பாக்யராஜ், சர்வேயர், திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகம், திண்டுக்கல்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 02/07/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 02/07/24
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

02.07.2024 – 11.00 hrs

Name: பெயர் U. பழனிச்சாமி,
Rank: நிலை ..................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திண்டுக்கல்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:3/2024 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

## Column No.12, FIR Contents

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 02.07.2024-ம் தேதி காலை 07.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது S.கணேஷ்குமார், த/பெ. சுப்பிரமணியன், 330, ஆர்.எம்.காலனி, பிள்ளையார்பாளையம், திண்டுக்கல் மாவட்டம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 02.07.2024-ம் தேதி காலை 08.30 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: S.கணேஷ்குமார், த/பெ. சுப்பிரமணியன், 330, ஆர்.எம்.காலனி, பிள்ளையார்பாளையம், திண்டுக்கல் மாவட்டம் பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். B.Tech IT முடித்துவிட்டு தற்போது சென்னையிலுள்ள EYGDS என்ற தகவல் தொழில் நுட்ப நிறுவனத்தில் Senior consultant ஆக கடந்த 2 வருடமாக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2015 முதல் 2021 வரை அமெரிக்காவில் TCS நிறுவனத்தில் பணிபுரிந்தேன். நான் அமெரிக்காவில் பணிபுரிந்த போது எனது பெற்றோர் திண்டுக்கலில் குடியிருந்து வந்தார்கள். அப்போது எனது பெயரில் ஒரு வீட்டுமனை வாங்குமாறு எனது அப்பாவிடம் தெரிவித்திருந்தேன். அவ்வாறு வாங்குவதற்காக எனது அப்பாவிற்கு Power of Attorney ஐ 17.03.2018ல் அமெரிக்காவில் இருந்தவாறே தயார் செய்து அங்குள்ள Notary public ல் அத்தாட்சி பெற்று அந்த ஆவணத்தை திண்டுக்கல் Joint-I சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு தெரிவித்து அனுப்பிவைத்தேன். அதன்படி எனது தந்தையும் அந்த Power of Attorney ஆவணத்தை திண்டுக்கல் Joint-I சார்பதிவகத்தில் ஆவண எண்.06/2018 ஆக 14.05.2018-ல் பதிவு செய்திருந்தார். அதன் பின்னர் திண்டுக்கல் மாவட்டம், சீலப்பாடி கிராமம், வெற்றி விநாயகர் நகரில் சர்வேஎண்.526/1B-ல் அடங்கும் பிளாட் எண்.8 என்ற 1623 ச.அடி வீட்டு மனையை என் பெயரில் ரூ.3,26,000/- க்கு வாங்கி திண்டுக்கல் Joint-I சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1542/2018 என்பதாக 06.06.2018 அன்று பதிவு செய்திருந்தார். பின்னர் மேற்படி வீட்டு மனையில் 2019-ல் எனது தந்தை வீடு கட்டினார். எனது தந்தைக்கு கொஞ்சம் உடம்புக்கு

முடியாமல் இருந்ததால் அமெரிக்காவிலிருந்து நான் திரும்பி வந்துவிட்டேன். அதன்பின்பு சென்னையில் உள்ள TCS நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தேன். பின்னர் எனது தந்தை கடந்த செப்டம்பர் 2022-ல் இறந்துவிட்டார். அதன்பின்பு நான் சென்னையிலுள்ள EYGDS நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்து இன்று வரை பணிபுரிந்து வருகிறேன். எனது அம்மாவை மட்டும் திண்டுக்கலில் தனியாக விட்டு விட்டு சென்னையில் நான் எனது குடும்பத்தினரோடு வசித்து வந்ததால் எனது அம்மா மிகுந்த சிரமத்தில் இருந்தார். எனவே திண்டுக்கலில் உள்ள வீட்டை விற்றுவிட்டு எனது அம்மாவை சென்னைக்கு என்னுடனே அழைத்து சென்றுவிடலாம் என்று முடிவு செய்து அதனை எனது குடும்பத்தாரிடம் தெரிவித்தேன். அதற்கு அவர்களும் சம்மதம் தெரிவித்தார்கள். நானும் கடந்த 15 நாட்களாக Work from home என்ற நிலையில் இருப்பதால் திண்டுக்கல்லில் இருக்கும் மேற்படி வீட்டை விற்பது தொடர்பான பணிகளில் ஈடுபட்டு வந்தேன். அப்போது நான் குடியிருக்கும் வீட்டின் பட்டாவானது எனது பெயருக்கு மாறுதல் செய்யப்படாமல் இருந்தது தெரியவந்தது. எனவே அதனை எனது பெயரில் மாற்றம் செய்வதற்காக திண்டுக்கல் to பழைய கரூர் ரோட்டில் உள்ள ஒரு E-சேவை மையத்தில் கடந்த 20.06.2024 அன்று online-ல் விண்ணப்பம் செய்தேன். எனது மனு எண்.2024/0103/13/317134, 20/06/2024 என்பதாகும். E-சேவை மையத்தினர் என்னிடம் பட்டா மாறுதல் தொடர்பாக சீலப்பாடி சர்வேயரை பார்க்குமாறு கூறினார்கள். அதன்பின்பு அந்த மனுவின் நிலையினை அறிய திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் உள்ள சீலப்பாடி கிராம சர்வேயர் அலுவலகத்திற்கு கடந்த 24.06.2024 அன்று காலை சுமார் 10.30 மணிக்கு சென்று சர்வேயர் திரு.பாக்யராஜ என்பவரை சந்தித்து மனுகுறித்து கேட்டேன். அப்போது அவர் Layout நகலை கொண்டு வந்து கொடுக்குமாறு தெரிவித்தார். அதன்படி நானும் 25.06.2024 அன்று காலை சுமார் 10.45 மணிக்கு திண்டுக்கல் மேற்கு தாலுகா அலுவலகத்தில் உள்ள சீலப்பாடி சர்வேயர் அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் திரு.பாக்யராஜ் அவர்களை சந்தித்து layout நகலை கொடுத்தேன். அதனை பெற்றுக்கொண்ட அவர் என்னிடம் பட்டாவானது வேறொருவர் பெயரில் உள்ளது, அதனை மாற்றவேண்டுமென்றால் 6 மாதங்கள் ஆகும் என்றார். அதற்கு நான் அவரிடம் எனது தந்தை இறந்துவிட்டதால் அந்த வீட்டை விற்பனை செய்துவிட்டு சென்னைக்கு செல்லப்போகிறேன். அதனால் பட்டா மாறுதலை செய்து கொடுங்கள்

என்று தெரிவித்தேன். அதற்கு அவர் பட்டா மாறுதலை செய்ய வேண்டுமென்றால் ரூ.30,000/- லஞ்சமாக கொடுங்கள் உடனே முடித்து தருகிறேன் என்று கூறினார். நான் என்னிடம் அவ்வளவு பணம் இல்லையென்று தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். அதன்பின்பு எனக்கு வேலை அதிகமாக இருந்ததால் நான் அவரை சென்று சந்திக்கவில்லை. இந்நிலையில் நேற்று 01.07.2024 காலை சுமார் 11.30 மணிக்கு திண்டுககல் மேற்கு தாலுகா அலுவலகத்திற்குள் அமைந்துள்ள சீலப்பாடி சர்வேயர் அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த சர்வேயர் திரு.பாக்யாரஜ் அவர்களை சந்தித்து எனது பட்டா மாறுதல் விண்ணப்பம் குறித்து கேட்டேன். அதற்கு அவர் ஏற்கனவே சொல்லிவிட்டேன் அந்த பணத்தை கொடுங்கள் முடித்து தந்துவிடுகிறேன் என்று தெரிவித்தார். நான் அவ்வளவு பணம் இல்லையென்று கூறி கொஞ்சம் குறைத்துக்கொள்ளுமாறு கூறினேன். அவரும் ரூ.20,000/- மாவது லஞ்சமாக கொடுங்கள் நான் இரண்டு டேபிள்களுக்கு மனுவை அனுப்பி வைத்துவிடுகிறேன், இதற்கும் குறைவாக யாரும் செய்து தரமாட்டார்கள் என்று தெரிவித்தார். அதற்கு நான் அவரிடம் தற்போது மிகுந்த கஷ்டமாக உள்ளது வீட்டினை விற்றால்தான் பணம் தயார்செய்ய முடியும், கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அவரும் முடிவாக ரூ.15,000/- கொடுத்து விடுங்கள் பட்டா பெற நடவடிக்கை எடுத்து முடித்து தருகிறேன் என்றார். மேலும், பணத்தை 01.07.2024 அன்றே சாயங்காலமாகவோ அல்லது 02.07.2024 அன்று காலையிலேயோ அலுவலகத்தில் சந்தித்து கேட்ட பணத்தை கொடுக்குமாறு கூறினார். நானும் சரி என்று தெரிவித்துவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நேற்று 01.07.2024 அன்று இரவு சுமார் 07.45 மணியளவில் எனது பைக்கில் திண்டுக்கல் to திருச்சி பைப்பாஸ் ரோட்டில் நிவிஸ் மஹால் அருகே சென்று கொண்டிருந்தேன். அப்போது 8883624937 என்ற எண்ணிலிருந்த எனது மொபைல் எண்.7871624527க்கு மிஸ்டு கால் வந்தது, திரும்ப நான் அந்த எண்னை அழைத்து யார் என்று கேட்டபோது அவர் சீலப்பாடி சர்வேயர் பேசுவதாக தெரிவித்தார். மேலும், அவர் என்னிடம் online விண்ணப்பம் VAO ID க்கு சென்றுள்ளதாகவும், Sub-division பட்டா என்றால் அவருக்குதான் அனுப்ப வேண்டும் ஆனால் தவறுதலாக சென்றுள்ளது, அதனை சரிசெய்து கொள்ளலாம் அதனால் 02.07.2024 காலையில் அலுவலகத்தில் சந்திக்குமாறு தெரிவித்தார். நானும் 02.07.2024 அன்று காலை 11 மணிக்குள் அலுவலகத்தில் வந்து சந்திப்பதாக அவரிடம் மொபைலில் தெரிவித்தேன்.

பட்டா மாறுதல் பணியை சீலப்பாடி சர்வேயர் திரு.பாக்யராஜ் அவர்களுக்கு லஞ்சமாக கொடுத்து முடிக்கவிருப்பமில்லை. எனவே என்னிடம் ரூ.15,000/- லஞ்சமாக கேட்ட சர்வேயர் திரு.பாக்யராஜ் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன். இந்த புகாருடன் online பட்டா மாறுதலுக்கான விண்ணப்ப நகலை இணைத்துள்ளேன். மேலும், சர்வேயர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.15,000/-ம் கொண்டு வந்துள்ளேன். நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்,
இப்படிக்கு, Sd/- xxxxx (S.கணேஷ்குமார், 02.07.2024)

Sir, Received the complaint on 02.07.2024 at 07.00hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused was found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.03/2024 u/s 7(a) of Prevention of Corruption Act 1988, as amended in 2018, on 02.07.2024 at 08.30 hrs and took up investigation. Sd/-xxxxx (P.Palanisamy, Inspector of Police, V&AC, Dindigul 02.07.2024)

Original FIR along with the complaint of S.Ganeshkumar, S/o.Subramaniyan, 330, R.M.Colony, Pillayarpalayam, Dindigul District and with the relevant documents are submitted to the Hon'ble Special Judge / Chief Judicial Magistrate, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

02/07/24

(P.Palanisamy)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.